**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, KARAIKUDI.**
**C.C. No.1876/2022 P.W.3**

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | கார்த்திக் ராஜா | த–பெ | ராஜாமணி |
| ஊர்: | : | ஆத்தங்குடி | | |
| வயது: | : | 24/2026 | வட்டம்: | |
| தொழில்: | : | கூலி வேலை | மாவட்டம் | சிவகங்கை |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 11.03.2026**
**எதிரி ஆஜர்.**

---------------------------------------------------------------------------------------------

முதல் விசாரணை.

நான் தற்சமயம் காரைக்குடியில் வசித்து கூலி வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும். தற்சமயம் வழக்கு குறித்து ஆஜர் எதிரியுடன் சமரசம் செய்து கொண்டு சமாதான மனு தாக்கல் செய்துள்ளேன். **சமாதான மனுவில் உள்ள கையொப்பம் அசாஆ 4.** ஆஜர் எதிரி எனது உறவினர் என்பதால் அவருடன் தற்சமயம் சமரசம் செய்து கொண்டுள்ளேன். சம்பவ சமயத்தில் ஆஜர் எதிரி மீது இருந்த பகை உணர்வு காரணமாக தவறுதலாக புகார் அளித்து விட்டேன். மற்றபடி எதிரியானவர் என்னையும் அசா1 யையும் பக்கத்து வீட்டை சேர்ந்த லட்சுமி என்பவரையும் கீழ்நோக்கிய வார்த்தைகளால் திட்டவில்லை அடிக்கவில்லை அரிவாளால் வெட்டவில்லை. கொலை மிரட்டல் எதுவும் விடுக்கவில்லை. முன் விரோதம் காரணமாக எதிரியை பழி வாங்கும் நோக்கத்தில் புகார் அளித்து விட்டோம். மற்றபடி எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எவ்வித சம்பந்தமும் கிடையாது. போலீசார் கேட்டுக்கொண்டதற்கு இணங்க விசாரணைக்கு ஒத்துழைத்தேன்.

**அரசு தரப்பில் கேட்டுக்கொண்டதற்கு இணங்க சாட்சியை பிறழ்சாட்சியாக கருதக்கோரி அனுமதி அளிக்கப்பட்டது.**

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை**

போலீசார் விசாரணையில் கடந்த 10.04.2022 அன்று இரவு 7.00 மணிக்கு நான் இருசக்கர வாகனத்தை தனக்கு தெரிந்த வெள்ளையம்மாள் என்பவர் வீட்டின் அருகில் வைத்து விட்டு சென்றதாகவும் ஆஜர் எதிரியானவர் மதுபோதையில் அங்கு வந்து இருசக்கர வாகனத்தை கீழே தள்ளிவிட்டதாகவும் ஏன் அவ்வாறு செய்கிறீர்கள் என்று கேட்டதற்கு தன்னை ஆஜர் எதிரியானவர் கீழ்நோக்கிய வார்த்தைகளால் திட்டி கீழே கிடந்த அரிவாளை எடுத்து தாக்க முயற்சித்ததாகவும் தடுக்க வந்த அசா1 ஐ எதிரி

தாக்கியதில் அவருடைய வலது தோள்பட்டையில் வெட்டியதாகவும் அதனால் அவருக்கு இரத்த காயம் ஏற்பட்டதாகவும் தன்னுடன் வந்த லட்சுமி என்பவரை எதிரியானவர் எட்டி உதைத்து ஊமை காயத்தை ஏற்படுத்தியதாகவும் அருகில் இருந்தவர்கள் வந்த உடன் எதிரியானவர் கொலை மிரட்டல் விடுத்துவிட்டு அரிவாளை காட்டி மிரட்டி விட்டு சென்றதாகவும் 108 ஆம்புலன்ஸில் சிகிச்சைக்காக காரைக்குடி அரசு மருத்துவமனையில் சென்று சேர்ந்ததாகவும் அங்கு எதிரி மீது நடவடிக்கை எடுக்குமாறு புகார் வாக்குமூலம் அளித்த விபரம் தெரிந்து கொண்டு தற்போது வழக்கு விசாரணையில் எதிரி தனது உறவினர் என்பதால் உண்மை சம்பவத்தை மறைத்து பிறழ் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

KARMEGAKANNAN J

Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2026.03.12 11:13:23 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
காரைக்குடி.

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, KARAIKUDI.**
**C.C. No.1876/2022 P.W.2**

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | லட்சுமி | க–பெ | சின்ன கருப்பன் |
| ஊர்: | : | ஆத்தங்குடி | | |
| வயது: | : | 47/2026 | வட்டம்: | |
| தொழில்: | : | துப்புரவு பணியாளர் | மாவட்டம் | சிவகங்கை |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 11.03.2026**
**எதிரி ஆஜர்.**
-----------------------------------------------------------------------------------------------------

<u>முதல் விசாரணை.</u>

நான் தற்சமயம் ஆத்தங்குடியில் வசித்து துப்புரவு பணியாளராக பணி செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும். அசா1 எனது உறவினர். தற்சமயம் வழக்கு குறித்து ஆஜர் எதிரியுடன் சமரசம் செய்து கொண்டு சமாதான மனு தாக்கல் செய்துள்ளேன். **சமாதான மனுவில் உள்ள கையொப்பம் அசாஆ 3.** ஆஜர் எதிரி எனது உறவினர் என்பதால் அவருடன் தற்சமயம் சமரசம் செய்து கொண்டுள்ளேன். சம்பவ சமயத்தில் ஆஜர் எதிரி மீது இருந்த பகை உணர்வு காரணமாக தவறுதலாக புகார் அளித்து விட்டோம். மற்றபடி எதிரியானவர் என்னையும் பிரபு என்பவரையும் அசா1 யையும் கீழ்நோக்கிய வார்த்தைகளால் திட்டவில்லை அடிக்கவில்லை அரிவாளால் வெட்டவில்லை. கொலை மிரட்டல் எதுவும் விடுக்கவில்லை. முன் விரோதம் காரணமாக எதிரியை பழி வாங்கும் நோக்கத்தில் புகார் அளித்து விட்டோம். மற்றபடி எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எவ்வித சம்பந்தமும் கிடையாது. போலீசார் கேட்டுக்கொண்டதற்கு இணங்க விசாரணைக்கு ஒத்துழைத்தேன்.

**அரசு தரப்பில் கேட்டுக்கொண்டதற்கு இணங்க சாட்சியை பிறழ்சாட்சியாக கருதக்கோரி அனுமதி அளிக்கப்பட்டது.**

**<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை</u>**

போலீசார் விசாரணையில் கடந்த 10.04.2022 அன்று இரவு 7.00 மணிக்கு அசா1 ன் மகன் கார்த்திக் ராஜா என்பவர் இருசக்கர வாகனத்தை தனக்கு தெரிந்த வெள்ளையம்மாள் என்பவர் வீட்டின் அருகில் வைத்து விட்டு சென்றதாகவும் ஆஜர் எதிரியானவர் மதுபோதையில் அங்கு வந்து இருசக்கர வாகனத்தை கீழே தள்ளிவிட்டதாகவும் ஏன் அவ்வாறு செய்கிறீர்கள் என்று கேட்டதற்கு அசா1 ன் மகனை ஆஜர் எதிரியானவர் கீழ்நோக்கிய வார்த்தைகளால் திட்டி கீழே கிடந்த அரிவாளை

எடுத்து தாக்க முயற்சித்ததாகவும் தடுக்க வந்த அசா1 ஐ எதிரி தாக்கியதில் அவருடைய வலது தோள்பட்டையில் வெட்டியதாகவும் அதனால் அவரக்கு இரத்த காயம் ஏற்பட்டதாகவும் தடுக்க வந்த தன்னையும் எதிரியானவர் எட்டி உதைத்து காலில் ஊமை காயத்தை ஏற்படுத்தியதாகவும் அருகில் இருந்தவர்கள் வந்த உடன் எதிரியானவர் கொலை மிரட்டல் விடுத்துவிட்டு அரிவாளை காட்டி மிரட்டி விட்டு சென்றதாகவும் 108 ஆம்புலன்ஸில் சிகிச்சைக்காக காரைக்குடி அரசு மருத்துவமனையில் சென்று சேர்ந்ததாகவும் அங்கு எதிரி மீது நடவடிக்கை எடுக்குமாறு அசா1 புகார் வாக்குமூலம் அளித்த விபரம் தெரிந்து கொண்டு தற்போது வழக்கு விசாரணையில் எதிரி தனது உறவினர் என்பதால் உண்மை சம்பவத்தை மறைத்து பிறழ் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

KARMEGAKANNAN J

Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2026.03.12 11:13:28 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
காரைக்குடி.

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, KARAIKUDI.**
**C.C. No.1876/2022 P.W.1**

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | நாச்சம்மை | க–பெ | ராஜாமணி |
| ஊர்: | : | ஆத்தங்குடி | | |
| வயது: | : | 52/2026 | வட்டம்: | |
| தொழில்: | : | கூலி வேலை | மாவட்டம் | சிவகங்கை |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 11.03.2026**

**எதிரி ஆஜர்.**

------------------------------------------------------------------------------------------------------

<u>முதல் விசாரணை.</u>

நான் தற்சமயம் காரைக்குடியில் வசித்து கூலி வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும். தற்சமயம் வழக்கு குறித்து ஆஜர் எதிரியுடன் சமரசம் செய்து கொண்டு சமாதான மனு தாக்கல் செய்துள்ளேன். **சமாதான மனுவில் உள்ள கையொப்பம் அசாஆ 1. புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் அசாஆ 2**. ஆஜர் எதிரி எனது உறவினர் என்பதால் அவருடன் தற்சமயம் சமரசம் செய்து கொண்டுள்ளேன். சம்பவ சமயத்தில் ஆஜர் எதிரி மீது இருந்த பகை உணர்வு காரணமாக தவறுதலாக புகார் அளித்து விட்டேன். மற்றபடி எதிரியானவர் என்னையும் எனது மகன் பிரபு என்பவரையும் பக்கத்து வீட்டை சேர்ந்த லட்சுமி என்பவரையும் கீழ்நோக்கிய வார்த்தைகளால் திட்டவில்லை அடிக்கவில்லை அரிவாளால் வெட்டவில்லை. கொலை மிரட்டல் எதுவும் விடுக்கவில்லை. முன் விரோதம் காரணமாக எதிரியை பழி வாங்கும் நோக்கத்தில் புகார் அளித்து விட்டேன். மற்றபடி எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எவ்வித சம்பந்தமும் கிடையாது. போலீசார் கேட்டுக்கொண்டதற்கு இணங்க விசாரணைக்கு ஒத்துழைத்தேன்.

**அரசு தரப்பில் கேட்டுக்கொண்டதற்கு இணங்க சாட்சியை பிறழ்சாட்சியாக கருதக்கோரி அனுமதி அளிக்கப்பட்டது.**

**<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை</u>**

போலீசார் விசாரணையில் கடந்த 10.04.2022 அன்று இரவு 7.00 மணிக்கு தனது மகன் கார்த்திக் ராஜா என்பவர் இருசக்கர வாகனத்தை தனக்கு தெரிந்த வெள்ளையம்மாள் என்பவர் வீட்டின் அருகில் வைத்து விட்டு சென்றதாகவும் ஆஜர் எதிரியானவர் மதுபோதையில் அங்கு வந்து இருசக்கர வாகனத்தை கீழே தள்ளிவிட்டதாகவும் ஏன் அவ்வாறு செய்கிறீர்கள் என்று கேட்டதற்கு தனது மகனை ஆஜர் எதிரியானவர்

கீழ்நோக்கிய வார்த்தைகளால் திட்டி கீழே கிடந்த அரிவாளை எடுத்து தாக்க முயற்சித்ததாகவும் தடுக்க வந்த தன்னை எதிரி தாக்கியதில் தன்னுடைய வலது தோள்பட்டையில் வெட்டியதாகவும் அதனால் தனக்கு இரத்த காயம் ஏற்பட்டதாகவும் தன்னுடன் வந்த லட்சுமி என்பவரை எதிரியானவர் எட்டி உதைத்து ஊமை காயத்தை ஏற்படுத்தியதாகவும் அருகில் இருந்தவர்கள் வந்த உடன் எதிரியானவர் கொலை மிரட்டல் விடுத்துவிட்டு அரிவாளை காட்டி மிரட்டி விட்டு சென்றதாகவும் 108 ஆம்புலன்ஸில் சிகிச்சைக்காக காரைக்குடி அரசு மருத்துவமனையில் சென்று சேர்ந்ததாகவும் அங்கு எதிரி மீது நடவடிக்கை எடுக்குமாறு புகார் வாக்குமூலம் அளித்துவிட்டு தற்போது வழக்கு விசாரணையில் எதிரி தனது உறவினர் என்பதால் உண்மை சம்பவத்தை மறைத்து பிறழ் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

KARMEGAKANNAN J

Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2026.03.12 11:13:34 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
காரைக்குடி.